www.Padasalai.Net www.CBSEtips.in

முனைவர் ... எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்., முதுகலைத் தமிழாசிரியர். (சேலம் மாவட்டம்)

HSL

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

**11 - ஆம் வகுப்பு**

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : (1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையைக் குறியீட்டுடன் எழுதுக.** 14 X 1 = 14

1. ஆறாம் திணை என்னும் பாடப்பகுதியில் அ. முத்துலிங்கம் அவர்களால் சொல்லப்படும் நிலப்பகுதி
அ) வயலும் வயல்சார்ந்த நிலமும் ஆ) மலையும் மலைசார்ந்த நிலமும்
இ) காடும் காடு சார்ந்த நிலமும் ஈ) பனியும் பனிசார்ந்த நிலமும்
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
3. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) புறநானூறு
4. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்
அ) புரட்சிக் கவி ஆ) சிலப்பதிகாரம் இ) மனோன்மணீயம் ஈ) ஔவை
5. தஞ்சைக் கோவில் கட்டப்பட்ட கலைப்பாணி அ) இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை
ஆ) திராவிடக் கட்டடக் கலை இ) வேசரக் கட்டடக்கலை ஈ) நாகரக் கட்டடக்கலை
6. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
7. 14 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படல் வேண்டும் என வலியுறுத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு அ) 45 ஆ) 43 இ) 23 ஈ) 22
8. கலைச்சொல் எழுதுக. - 'Organic Farming' அ) செயற்கை வேளாண்மை
ஆ) இயற்கை வேளாண்மை இ) மதிப்புக் கூட்டு வேளாண்மை ஈ) அறுவடை
9. 'கழிநகர்' - இலக்கணக் குறிப்பு எழுதுக. அ) பெயரெச்சத் தொடர்
ஆ) வினையெச்சத் தொடர் இ) உரிச்சொல் தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்
10. 'உழத்திப் பாட்டு' என அழைக்கப்படும் சிற்றிலக்கிய வகை
அ) குறவஞ்சி ஆ) உலா இ) பிள்ளைத் தமிழ் ஈ) பள்ளு
11. 'சீறா' என்னும் சொல்லின் பொருள் அ) வாழ்க்கை ஆ) பயணம் இ) வரலாறு ஈ) இறை நிலை
12. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து .......... நினை அ) முகக்குறிப்பை அறிந்தவரை
ஆ) எண்ணியதை எண்ணிய வரை. இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
13. நேரொன்றாசிரியத்தளை எனப்படு அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
14. பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக என உணர்த்தும் மெய்ப்புத் திருத்தக் குறியீடு ..........
அ) # ஆ) ⌒ இ) ⊐ ஈ) ⊏

### பகுதி - II

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. காவடிச் சிந்து என்பது யாது?
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. "கற்றேன் என்பாய் கற்றாயா" என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநிலமரம் – சிறுகுறிப்பு வரைக.
20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
21. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. ***மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.*** அ) நிறை குடம் ஆ) கானல் நீர்
23. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*** அ) நஞ்சிருக்கும்
24. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
அ) அனைத்துத்துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்
25. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
அ) வலி, வளி, வழி ஆ) கனை, கணை
26. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
அ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை
ஆ) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

27. **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.** அ) நெருங்கின ஆ) செய்வான்
28. **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.** அ) மண்ணுடை ஆ) அரும்பொருள்
29. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
அ) காலத்துக்கேற்ற மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
ஆ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
30. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.

பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. 'ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' – இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.
33. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?
34. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக.** 3 X 4 = 12

39. உருவக அணி அல்லது வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. ***(மையக்கருத்தை எழுதி ஏற்புடைய மூன்று கருத்துகளை எழுதுக)***

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

***– நாமக்கல் கவிஞர்***

41. **கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க.**

உடல் வளர்த்தேன் ! உயிர் வளர்த்தேன் !!
இயற்கை உணவுத் திருவிழா
நாள் : தை 5 முதல் 11 வரை நேரம் : மாலை 6 – 10 மணி இடம் : தீவுத்திடல், சென்னை.

| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமை பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை இன்னும் பல |

42. **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**
அ) அறிவைத் தேடிப் போகுமிடம் ; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ..........
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ..........
இ) வேடம் போட்டவன் வேடதாரி ; பட்டம் வாங்கியவன் (தாரி) ..........
ஈ) வேவு பார்த்திடுவான் ; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) .......... .
43. **தமிழாக்கம் தருக.**
அ) You must be the change you wish to see in the world.
ஆ) Param Vir Chakra award, highest award for army personnel.
இ) The Chinese have no religious science. ஈ) Culture does not make people. People make culture.

பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 X 6 = 18

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
***(அல்லது)*** பாரதிதாசன் ஒரு 'புரட்சிக் கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.
45. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. ***(அல்லது)*** சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.
46. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)*** பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6
அ) 'ஏடு தொடக்கி' ...... எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக. ஆ) 'படின்' – என முடியும் குறள்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com